செய்தி வெளியீடு எண் : 2626 **நாள் : 28.12.2023**

<u>செய்தி வெளியீடு</u>

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் இன்று (28.12.2023) பிரம்மாண்டமாக நடைபெறவிருந்த "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழா, எதிர்கட்சி முன்னாள் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டி ரத்து செய்யப்பட்டது.

இவ்விழாவிற்காக நேற்று வருகை தந்திருந்த மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் அவர்கள் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி, மரியாதை செலுத்தினர்கள். அதுபோது வைக்கம் போராட்டத்தின் "வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலர்" "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" ஆகிய நூல்களை வெளியிட்டனர். இந்நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்கள் ஆற்றவிருந்த உரை பின்வருமாறு:

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை:</u>

அனைவர்க்கும் வணக்கம். எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், முக்கியமான ஒரு செய்தியை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அண்மையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத அளவுக்குப் பெய்த கனமழையால அங்கே இருக்கக் கூடிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில், சகோதரப் பாச உணர்வோடு, 'அன்போடு கேரளம்' என்கிற பெயரில், தமிழ்நாட்டுக்கு நிவாரண உதவிகளையும் அதிகாரிகளையும் அனுப்பி வைத்த கேரள மக்களுக்கும், மாண்புமிகு கேரள முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாடு முதலமைச்சராக என் நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?

'வை கத்தி! தீண்டாமைக் கழுத்தில்' என்று

வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி

வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!"

– என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது கனல் தெறிக்கும் வரிகளால் எழுதினார்.

"ஈ.வெ.இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்" – என்று அறிவித்துக் கொண்டு 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களின் சமூகநீதியை நிலைநிறுத்தவும் தந்தை பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமானது வைக்கம் போராட்டம் ஆகும்.

அத்தகைய வைக்கம் வீரர் – பகுத்தறிவுப் பகலவன் – தந்தை பெரியாரின் வெற்றிப் போராட்டங்களில் ஒன்றான வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இவ்விழாவில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள கேரள மாநில முதலமைச்சர் – மரியாதைக்குரிய காம்ரேட் பினராயி விஜயன் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன்.

வைக்கம் போராட்டம் என்பது கேரள சீர்திருத்தவாதிகளும் – தமிழ்நாட்டுச் சீர்திருத்தவாதிகளும் இணைந்து நடத்திய போராட்டம் என்பதால் இரண்டு மாநில அரசும் சேர்ந்து நூற்றாண்டு விழாவை நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த வகையில் நூற்றாண்டு தொடக்க விழாவைக் கடந்த ஏப்ரல் மாதம் 1–ஆம் தேதியன்று கேரளாவில் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள் நடத்தினார்கள். அதில் நான் கலந்து கொண்டேன். இன்றைய தினம் தமிழ்நாடு அரசு நடத்துகிறது. கேரள முதலமைச்சர் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். இணைந்து போராடினால்

எதிலும் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்கிறது.

கேரளத்தில் சமூகப் புரட்சி இயக்கம் என்பது நாராயணகுரு, டாக்டர் பல்ப்பு பத்மநாபன், குமாரன் ஆசான், அய்யன்காளி, டி.கே.மாதவன் – ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

தமிழ்நாட்டு புரட்சி இயக்கமானது இராமலிங்க வள்ளலார், வைகுண்டசாமி, அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், டி.எம்.நாயர், தந்தை பெரியார் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

இதில் கேரளத்தைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் – தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தை பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம் தான் வைக்கம் போராட்டம் ஆகும். 1924–25ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின், வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்தது. 1924–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30–ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அப்போராட்டம்.

அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாள்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இன்றிப் போராட்டம் தவித்தது. இச்சூழலில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பலநாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

போராட்டக்காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை அருவிக்குத்தி என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில் ஒரு மாதகாலம் சிறை தண்டனைஅனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஒருமாத காலம் திருவனந்தபுரம் சிறையில் கழித்தார்.

வைக்கம் போராட்டம் நடந்தது மொத்தம் 603 நாட்கள். இதில் 141 நாட்கள் தந்தை பெரியார் அவர்கள் பங்கெடுத்தார்கள். அதில் 74 நாட்கள் சிறையில் இருந்தார்கள். வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து 7 முறை கேரளத்துக்குச் சென்றுள்ளார் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால் – இந்த போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால் பெரியாரை மிகமோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு – கழுத்தில் மரப்பலகையை மாட்டி – அடைத்து வைத்திருந்தார்கள். இதே போராட்டத்தில் கைதாகிச் சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவ மேனன் அவர்கள் 'பந்தனத்தில் நின்னு' என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்... " தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் – ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும் – ஒரு பெரும் பணக்காரரும் – உத்தம தேசாபிமானியுமான – ஈ.வெ.ராமசாமி அவர்களுக்குக் காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக்கட்டையை மாட்டி கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளத்தின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்துக்காகத் தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்கு புத்துயிர் தந்தது" – என்று கே.பி.கேசவ மேனன் எழுதி இருக்கிறார்கள். சிறையிலிருந்து

விடுவிக்கப்பட்டதும், உடனே ஈரோடு திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் பெரியார்.

போராட்டக்காரர்களுக்கும் மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தை பெரியாரிடம் கலந்துரையாடல் நடத்திய பிறகே திருவிதாங்கூர் ராணியைச் சென்று சந்தித்தார்.

'சாலைக்குள் அனுமதிக்கிறோம், கோவிலுக்குள் அனுமதிக்க முடியாது' என்று ராணி அவர்கள் அப்போது சொன்னார்கள். இதனைப் பெரியார் அவர்களிடம் சொல்லி, 'கோவில் நுழைவை சிறிதுகாலத்துக்கு நீங்கள் ஒத்தி வைக்க வேண்டும்' என்று காந்தி அவர்கள் அனுமதி பெற்றார் என்பதும் வரலாறு ஆகும். "திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வி.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபீஸ் வாங்கிக்கொண்டுவிட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்" என்றும் யங் இந்தியா பத்திரிக்கையில் காந்தி அவர்களே எழுதினார்கள் என்றால் பெரியாரின் பங்களிப்பு எவ்வளவு இருந்துள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

"Mr. Ramasami Naicker arrived on that day from Erode to take charge of the campaign" என்றும்; "One Ramaswami Naicker of Erode is now leading the movement" என்றும் போலீஸ் ஆவணங்களில் பெரியார் பெயர் இருக்கிறது. பெரியார் தலைமை தாங்கினார் என்பதை காவல்துறை ஆவணங்களே சொல்கின்றன.

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23–ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29–ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. இதில் பெரியார் வீட்டுப் பெண்கள் அளித்த பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்றபோது அவருடன் அவரது மனைவி நாகம்மையாரும், பெரியாரின் சகோதரி கண்ணம்மாவும், பெரியாரின் உறவினர்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாளும் சென்றிருக்கிறார்கள். இவர்கள்தான் கேரளப்

பெண்களையும் போராட்டத்துக்குள் கொண்டு வந்தார்கள். போராட்டத்துக்கான நிதி திரட்டுவதற்காக ராட்டை நூற்றார்கள் இவர்கள்.

வைக்கம் போராட்டத்தில் தேசத்துரோகத்தில் ஈடுபட்டதாகப் பெரியார் சிறைப்பட்டிருந்த சமயம் நாகம்மையார் தலைமையிலான ஆறு பெண்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். பெரியார் சிறை வைக்கப்பட்டு இருப்பதால் மற்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று நாகம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களை, வைக்கம் கோயில் சாலையை நோக்கி நாகம்மையார் அவர்கள் அழைத்துச் சென்றபோது காவல்துறையால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். ஒவ்வொருவரையும் என்ன ஜாதி என்று கேட்டு – அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவரை மட்டும் உள்ளே விடாமல் தடுத்துள்ளது காவல்துறை. அங்கேயே தர்ணா செய்துள்ளார் நாகம்மையார். அவரது போராட்டத்தைக் கேரள பத்திரிக்கைகள் விரிவாக எழுதி உள்ளன.

மகத் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். அதன்பிறகுதான் தமிழ்நாட்டில் ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்கள் நடைபெற்றன. அனைவரும் கோயிலுக்குள் நுழையலாம், அதனை யாரும் தடுக்கக் கூடாது என்ற சட்டம் அதன் பிறகுதான் வந்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகிறது. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும் – சமூகநீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தவும் "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

* கடந்த ஏப்ரல் 1–ஆம் நாள் கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினேன். அன்றைய தினம் வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத்தூணுக்கு மரியாதை செலுத்தினோம்.

* தமிழ்நாட்டில் மிக முக்கியமான வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான பழ. அதியமான் அவர்கள் எழுதிய "வைக்கம் போராட்டம்" என்ற தமிழ் நூலின் மலையாளம், கன்னட மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

* கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க 8 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு – மாபெரும் நினைவகம் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மேற்பார்வையில் அது கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் அப்பணிகள் முடிவடையும். அதனைத் திறந்து வைப்பதற்கு நானும் கேரளம் செல்ல இருக்கிறேன்.

*தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன் முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குத்தி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கேரளா சென்று அந்த இடத்தை பார்வையிட்டு வந்துள்ளார்கள். அதனை முறைப்படி கேரள அரசிடம் இருந்து பெற்றுப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

* வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்றுத் தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று 'தமிழரசு' இதழ் மூலம் கொண்டு வரப்படும் என்று அப்போது அறிவித்து இருந்தேன். அத்தகைய சிறப்பு மலர் இப்போது

வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலருக்கு என்ன சிறப்பு என்றால் இது மூன்று மொழிக் கட்டுரைகளைத் தாங்கியதாக அமைந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிக் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் பெரியாரை வைக்கம் வீரர் என்று சொல்கிறார்கள் என்பது போன்ற தோற்றத்தை சிலர் உருவாக்கப் பார்க்கிறார்கள். கேரள வரலாற்று ஆவணங்களிலும் – வைக்கம் குறித்து ஆய்வு செய்த ஆங்கில வரலாற்றாசிரியர்களும் பெரியாரின் பங்களிப்பை மறைக்காமல் – மறுக்காமல் பதிவு செய்துள்ளார்கள். அதன் முழுத் தொகுப்பாக இந்த மலர் அமைந்துள்ளது.

தந்தை பெரியார், டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் பிள்ளை, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நான் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும். எத்தகைய கசப்பான காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு சீர்திருத்த இயக்கம் – அரசியல் பரிணாமம் பெற்று – ஆட்சியைப் பிடித்து – பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் – " ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை." என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வைக்கம் போராட்ட வெற்றி விழா 29.11.1925 நடந்தபோது அதில் கலந்து கொள்ள பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் அழைப்பு வந்திருந்தது. தலைமை வகிக்கச் சொன்னார்கள். தலைமை வகிக்க மறுத்து வாழ்த்திப் பேசினார் பெரியார். " உரிமையை மறுத்த அரசாங்கமே இப்போது நம்மை கையை பிடித்து அழைத்துச் செல்கிறது. இதுதான் சத்தியாகிரகத்துக்கு ஏற்பட்ட மகிமை. பலாத்காரப் போராட்டம் நடத்தியிருந்தால் கூட இந்த வெற்றியை இவ்வளவு சீக்கிரம் பெற்றிருக்க மாட்டோம்' என்று பேசினார் பெரியார். இத்தகைய வெற்றியின் 100 ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

அன்று பெரியாரையும் வைக்கம் போராட்ட வீரர்களையும் கைது செய்தது திருவிதாங்கூர் அரசு. ஆனால் இன்று வைக்கம் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசும் – கேரள மாநில அரசும் சேர்ந்து கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இரண்டு மாநில முதலமைச்சர்கள் இங்கே இருந்து கொண்டாடுகிறோம். இதுதான் வைக்கம் உரிமைப் போராட்டத்தின் வெற்றியாகும். 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம் இது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசும் – கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசும் – கொள்கை சார்ந்த அரசாக இருப்பதால் இதனை நாம் கொண்டாடுகிறோம்.

பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டு இருக்கும் போது வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமானது. சாதாரண ராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இது போன்ற கடந்த கால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு இது போன்ற விழாக்கள் பயன்பட வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படி இருந்தோம் – இப்போது எப்படி இருக்கிறோம் என்ற கடந்த காலத்தை அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மாற்றத்தை உருவாக்கியதில் பெரும் பங்கு சமூகநீதித் தத்துவத்துக்கு உண்டு. கல்வியில் – வேலை வாய்ப்பில் – சமூகப் பங்களிப்பில் நாம்

சமூக நீதியை முழுமையாக அடைந்துவிட்டோம். நாம் அரசியல் ரீதியாக தடுக்கப்பட்ட இடங்களில் புகுந்து வெற்றி பெற்று அதிகார நிறுவனங்களைக் கைப்பற்றி விட்டோம். பொருளாதார சுதந்திரம் என்பதும் பல்வேறு வகைகளில் கிடைத்து வருகிறது. ஆனால் சமூகத்தில் ஒரு சில இடங்களில் முழுமையான சமூகநீதி கிடைத்து விட்டதா என்றால் இல்லை என்று சொல்ல வேண்டும்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அனைவரும் அனைத்து இடங்களையும் சமமாக நடத்தப்படுவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவற்றையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும். சமூக சீர்திருத்தமாக இருந்தாலும் – புரட்சியாக இருந்தாலும் சாதாரணமாகக் கிடைத்து விடாது. தானாகக் கிடைத்து விடாது. "தானாய் எல்லாம் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா' என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாட்டு ஆகும். நாம்தான் மாற்றியாக வேண்டும். ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலையை ஒடுக்கப்பட்டோரே போராடிப் பெற்றாக வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாக மன மாற்றம் செய்வதும் – போராட்டங்களின் மூலமாக வலியுறுத்துவதும் – சட்டங்களின் மூலமாகக் கட்டாயப்படுத்துவதுமான மும்முனைத் தாக்குதலை நடத்தியாக வேண்டும்.

தீண்டாமைக்கு எதிராக – சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிராக – உயர்வு தாழ்வுச் சிந்தனைக்கு எதிராக – நாம் போராடியாக வேண்டும். அது மட்டுமல்ல ஆண் – பெண் பாகுபாடு களையப்பட வேண்டும். ஆணாதிக்கச் சிந்தனையும் – பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் தடுக்கப்பட வேண்டும். மார்க்சியம் – பெரியாரியம் – அம்பேத்கரியம் போன்ற முற்போக்குச் சிந்தனைகள் அனைத்துமே – அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராட உருவாக்கப்பட்டவைதான்.

இத்தகைய சமூக சீர்திருத்த – புரட்சியாளர்கள் காட்டிய வழியில் சமூகநீதி – சமத்துவ – சமதர்ம சமுதாயம் அமைக்க நாம் நமது போராட்டப் பயணத்தை இறுதி இலக்கை எட்டும் வரை தொடர்வோம் என்ற உறுதிமொழியை வைக்கம் நூற்றாண்டு விழாவில் எடுத்துக் கொள்வோம்.

தந்தை பெரியார் அவர்கள் மறைந்த போது, தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் – 'பெரியார் தனது சுற்றுப்பயணத்தை நிறுத்திக் கொண்டார், நாம் தொடர்வோம் ' என்று குறிப்பிட்டார். தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப் பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம், தொடர்வோம்!

<u>மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்களின் உரை:</u>

Dear brothers and sisters, greetings to you all.

Vaikkom Satyagraha is a people's movement that is unparalleled in Indian history. We are gathered here as part of its centenary celebrations.

Both Kerala and Tamil Nadu take pride in the Vaikkom Satyagraha. This Celebration organised here in Chennai is a testament to the fact that our Tamil brothers are as proud of Keralites, when it comes to the Vaikkom Satyagraha and its heritage. Let me take this opportunity to congratulate my dear brother and comrade, the honourable Chief Minister of Tamil Nadu, Thiru M K Stalin, for organising this splendid event to commemorate the centenary of Vaikkom Satyagraha, in a befitting manner.

There are several renaissance movements that emerged in Kerala. The Maarumarakkal Samaram, Aruvippuram Prathishta, Villuvandi Samaram, Kallumala Samaram, Grurvayur Satyagraha and so on are among them. The Vaikkom Satyagraha is an important link in this long chain of renaissance movements. Yet, it is unique, it stands apart from the rest.

What makes it different from the other movements in this strand? It is the fact that the renaissance movements that focussed on social reformation and the anti colonial movement that fought for national liberation conjoined as one in the Vaikkom Satyagraha. Till then, renaissance leaders and community organisations took up reform movements on their own. But in the Vaikkom Satyagraha, they joined hands with the leaders of the national freedom struggle. This is the historical significance of Vaikkom Satyagraha.

I do not think that there has been such a struggle anywhere else against social evils, under the leadership of both reform movements and political movements. It may not have been possible for such a progressive movement to take place in Kerala, had it not been for the

great humanitarian values illuminated by renaissance leaders like Sree Narayana Guru, Chattambi Swamikal and Ayyankali. Sree Narayana Guru visited Vaikkom. He even opened up his Ashram for the Satyagrahis. Even a committee was formed to abolish untouchability.

Freedom of movement is a fundamental right of the citizen. However, that was not being allowed in our country. A vast majority of the people were not allowed to walk on public roads, especially those near temples. Notions of purity and untouchability were associated with it. Vaikkom Satyagraha emerged from the realisation that this was denial of a fundamental right. It was a clarion call against the anti-human caste system, 'Varnasramadharma'.

It went further ahead through the Guruvayur Satyagraha. These struggles paved the way for the Temple Entry Proclamation. In that regard, Vaikkom Satyagraha was a model for the whole nation, as several struggles related to temples and access to public roads were held in several parts of the country, subsequent to it. Apart from Guruvayur, the influence of Vaikkom Satyagraha can be seen in Pune, Nashik, and so on too.

At the outset itself I made it very clear that Tamil Nadu and Kerala have many things in common, to take pride, with regard to the common heritage of Vaikkom Satyagraha. Kerala always recollect with pride the very historical fact that Periyar E V Ramaswamy Naicker, who valiantly fought against the evils of Caste System, Arya dominance and Brahmanical hegemony, had come to our State to take part in this historical struggle of Vaikom.

With scant regard for his failing health, he took part in the struggle, and was imprisoned twice. It is worth recollecting that, it was after his heroic participation in Vaikkom Satyagraha, that he received the title, 'Vaikkom Veerar'. Vaikkom Satyagraha too played a decisive and significant role among other things, in elevating his stature to that of Thanthai Periyar.

It is also to be noted that Tamil Nadu was one with us in taking renaissance movements to greater vistas and historical horizons. The

glowing presence of C Rajagopalachari, Srinivasa Iyenkar, Aiyyamuthu Gounder, etc. in the forefront of Vaikkom Satyagraha go a long way in establishing the solidarity, Tamil Nadu had extended to us during the period of Vaikkom Satyagraha.

Kerala and Tamil Nadu share the heritage of such glorious struggles for the people. In the coming days too, we have to go ahead in the same vein, with renewed vigour. Vaikkom Satyagraha presents a model to us, that different strands of thoughts can and should come together for a common goal, a larger purpose. Such a coming together is required in the future too, and we have to make it a big fraternal bond, with a decisive power.

Vaikkom Satyagraha presents another model too, that those who are subjected to social evils or oppression alone, shouldn't be the ones fighting against it. Even those who may seem to enjoy the ill gotten benefits of such evils and oppression should come together to fight it. It needs to be noted that K Kelappan, K P Kesava Menon, Mannathu Padmanabhan, Kurur Neelakantan Namboodiripad, T K Madhavan, T R Krishnaswamy Iyer, Kannanthodathu Velayudha Menon were all in the fore front of the Vaikkom Satyagraha.

The role played by the likes of T K Madhavan in linking this movement to the freedom struggle deserves special mention. In the AICC session held at Kakkinada, he introduced a resolution for the abolishment of untouchability and in favour of temple entry. Gandhiji gave his blessings to T K Madhavan. It was after seeking Sree Narayana Guru's blessings that he went to meet Gandhiji about the Satyagraha. Gandhiji's first visit to Kerala was in connection with the Vaikkom Satyagraha.

When Gandhiji visited Vaikkom, he was denied entry into the Indamthuruthi Mana which had administrative control over the temple, as he was an 'avarnna'. When he requested that the public roads surrounding the temple should be open to all, the authorities of the Mana, the 'savarnnas', declined to do so. Today, that Mana functions as the office of a workers organisation, that too workers who come from a background that was considered as 'avarnna' in those days. This is a

telling example of how history ultimately goes ahead, moves forward, in a progressive direction.

Not just the members of different castes, but even the members of different religions were part of Vaikkom Satyagraha. In that sense, it was truly a people's movement. K Abdul Rahmankutty, Pareed Sahib, M K Abdul Rahim and so on represented the Muslim community and expressed solidarity. People like George Joseph played a lead role behind the scenes in organising the Satyagraha. Brothers of the Sikh faith even set up a 'langar' at Vaikkom. Thus, the Satyagraha had a truly secular character.

As far back as 1865 itself, Travancore had decided to allow all sections of the society, including the backward communities, to use public roads. Still, even six decades later, a people's movement had to emerge for that decision to be implemented. This is a pointer to the fact that social transformation cannot be brought about by the mere implementation of better laws. To achieve that, people's movements which can bring about progressive changes in societal attitudes and actions, will also have to emerge. Vaikkom Satyagraha underlines this.

There is a tendency to cement the argument that political movements had and have nothing to do with social movements. Vaikkom Satyagraha lays bare the hollowness of that line of thought. Most of the reform movements in India come about as the result of towering personalities. Raja Ram Mohan Roy, E V Ramaswamy Naikar, Jyotibha Phule, Sree Narayana Guru and so on have certainly played a major role in bringing about social transformation in the country. However, Vaikkom Satyagraha did not revolve around a single personality. It was the joint effort of all those involved in social and political movements that ensured its victory.

It needs to be noted that the political formations that took forward the heritage of the renaissance movements that emerged in the earlier part of the 20th century, are in office in both Tamil Nadu and Kerala today. The Dravidian Movement which was led by Periyar and Anna, has been transformed in tune with the times by those like Karunanidhi. The DMK Government in Tamil Nadu is carrying forward this glorious legacy. In Kerala, the LDF Government is trying to build a Nava Keralam, by

imbibing the values of our renaissance movements, like inclusivity and sustainability. It is only fitting that both these political formations and the governments led by them are coming together to commemorate the centenary of the Vaikkom Satyagraha.

Vaikkom Satyagraha was organised a 100 years back, to cater to the larger interests of the society. We live in times when we need to come together to protect our history, language, cultures, secularism, federalism, democracy and the constitution that brings it all together, for the larger interests of the country. When we commemorate a movement that brought different strands – social and political – together for the common good, it is imperative that we too strive to bring such different strands together to achieve the common good relevant to our times.

Back then the fight was against casteism, untouchability, social evils, superstitions, inhuman rituals and so on. We need to be mindful of the fact that even today there are efforts to mainstream such regressive thoughts and practices. There are efforts to divide us on the basis of religion and region as well. Though we fought and attained independence, today we are being pushed to economic ties and trade agreements that pose challenges to our sovereignty. We need to fight against all these, considering the common good. Times demand it from us, as responsible political organisations and governments.

A scathing attack has been unleashed on our Constitution and the values it upholds, the values that emerged as part of our glorious freedom struggle. I had mentioned about the secular character of Vaikkom Satyagraha. It was one of the most cherished values of our freedom struggle. It is one of the foundational principles of our Constitution. However, our secular polity is sought to be substituted by a religious state. Our Constitution is sought to be replaced by the Manusmriti. Our federal structure is being altered into a unitary structure.

We need to be conscious about all such sinister designs and fight against them, so that the basic structure of secular, socialist, democratic, independent, India is protected and strengthened.

In the past, we faced similar problems. At that point of time, we faced it and survived it, standing together. Presently too, we face similar issues and problems. We are sure, we standing hand in hand will, tide over the crisis posed by these forces at this time too. It is rather unfortunate that Gubernotorial posed are being misused for subverting the authorities of the elected Governments of States.

Under what authority and power are the Governors in this country, reserving the Bills passed by the legislature, concerning a subject in the State list, for the consideration of the president? When in our Federal polity, even the President has no power to consider the validity of a State legislation on a subject falling in the State list, by referring such bills for the consideration of the President, the Governor is, in fact, abdicating the powers vested in him under the constitution. It also amounts to an act aimed at annihilating the powers of an elected legislature.

So long as a State legislation concerning a subject falling in the concurrent list does not violate any of the provisions in the central law touching the same subject, in other words, so long as the State legislation is not in the filed occupied by the central legislation, such bills passed by the State legislature cannot be reserved by the Governor for the consideration of the President. Even if the Governor is of opinion that there is anything contrary to the provisions of the constitution in the Bill, the proper course open to the Governor is to send back the bill to the State legislature, with his remarks on it.

In this connection, it is worthwhile to remember that the ultimate authority to decide upon the constitutionally of a law is vested with the constitutional courts in this country. Blissfully forgetting this fact, some persons holdings the gubernatorial post in this country are encroaching upon the fields legitimately assigned to the judiciary by the constitution.

The powers properly set apart by the constitution to a democratically elected legislature, if allowed to be interfered with by a nominated authority like the Governor, then, it will only be futile to think about the prevalence of a democratic polity in the country. No Governor, functioning under the constitution in this country has any power or authority to keep the bills sent for his assent, indefinitely. This is a well established legal position, time and again reiterated in no uncertain

terms by the Apex Court in this country. It is when this position in law has been reiterated by the Highest Court in this country in no unmistaken terms that the Governors, whose hidden intention is to sabotage the democratic process, have decided to effectively freeze it, by referring the Bills for the consideration of the President.

In the State of Kerala, the Governor has kept as a many as eight bills sent for his assent in abeyance, for more than two years. It was only when such inertia on the part of the Governor was challenged by the State of Kerala before the court, that the Governor gave assent to one among the said eight bills, while sending the remaining for consideration by the President. That shows, evidently the Governor was conscious of his illegal actions. Inspite of that, he did so, only shows the political vengeance on his part. Such power centers will do well to remember that the people of this Country are capable of confronting and defeating such revengeful acts of theirs, effectively.

I conclude by expressing the desire that this centenary celebration of the Vaikkom Satyagraha will serve as a source of renewed vigour and strength in this journey forward. Thank you.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in